**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2025ம் ஆண்டு ஜூலை திங்கள் 10ம் நாள் வியாழக்கிழமை**

**I.A. No.215/2025**

**in**

**OS.No.123/2021**

**(CNR.NO. TNVP02-000332-2021)**

1. நதியா
2. ராதா .... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

பூபதி .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 09.04.2025 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 09.04.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 04.07.2025 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.A.நாராயணசாமி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.காளிதாஸ், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/வாதியால் இம்மனு கட்டளை 8 விதி 3-சி.பி.சி-யின் கீழ் மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து தற்போது மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யும் 1 முதல் 8 வரையான ஆவணங்களை வாதி தரப்பில் குறியீடு செய்ய அனுமதி கோரி பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர் தரப்பில் தான் இம்மனுவில் மனுதாரர் என்றும் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி என்றும், மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர் இந்த மனுதாரருக்கு எதிராக உரிமை விளம்புகைக்காகவும், சொத்துடைமையை ஒப்படைவு கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் காலத்தில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்ய இயலாமல் போனது என்றும், காரணம் கை தவறுதலாக எங்கேயோ மறைத்து வைத்துவிட்டோம் என்றும், அந்த ஆவணங்கள் தற்போதுதான் தேடி கிடைக்கப்பெற்றதாகவும், எனவே மேற்படி காலதாமதத்தை மன்னித்து தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.9 வரையான ஆவணங்களாக குறியீடு செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம்:-**

மனுதாரரின் மனு சுத்த தப்பும் பொய்யும், மோசமுமானது சட்டப்படி ஏற்புடையதல்ல இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடிக்கு உகந்தது என்றும், உண்மையில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனு மூலம் காலதாமதமாக தாக்கல் செய்வதாய் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் வழக்கு தாக்கல் காலத்தில் இருந்தும் அதனை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது காலம் கடந்து தாக்கல் செய்வதற்கு குறிப்பிட்டுள்ள காரணம் ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் தாக்கல் செய்த 1 முதல் 9 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் எதிர்மனுதாரர்/வாதி வழக்கு சொத்தை கிரையம் பெற்ற பிறகு பட்டா மாற்றம், மின் இணைப்பு, பெயர் மாற்றம் வீட்டுவரி பெயர் மாற்றம் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளால் செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீதுகள் மற்றும் வீட்டுவரி ரசீதுகள் என்றும், எதிர்மனுதாரர்/வாதி 23.05.2018ம் ஆண்டு வழக்கு சொத்தை கிரையம் பெற்ற பிறகு 03.02.2021 அன்று எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் எதிர்மனுதாரருக்கு அளித்த மின் இணைப்பு பெயர் மாற்றம்

சான்று எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னிட்டு 03.02.2021 அன்று செலுத்திய மின் கட்டண ரசீது 2020, 2021 ஆண்டிற்கு வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கு கட்டிய வீட்டு வரி ரசீது அனைத்தும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பொருந்தாது என்றும், அது எதிர்மனுதாரரை ஒருபோதும் கட்டுப்படுத்தாது என்றும், மனுதாரர்கள், தரப்பில் சாட்சியங்களை திரட்டுவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தற்போதும் வழக்கு சொத்தில் வாடகைக்கு இருந்து வந்து வாடகை ஏதும் கொடுக்காமல் இருந்து வருகிறார்கள் என்றும், இந்நிலையில் மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கது அல்ல என்பதால் அது தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. தீர்வுக்கான பிரச்சினை :-</u>**

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?

**6. <u>தீர்வு :-</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

7. மனுதாரர் தரப்பில் மனுதாரரின் வழக்கறிஞர் தனது வாதுரையில் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் காலத்தில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்ய இயலாமல் போனது என்றும், காரணம் கை தவறுதலாக எங்கேயோ மறந்து வைத்துவிட்டோம் என்றும், அந்த ஆவணங்கள் தற்போதுதான் தேடி கிடைக்கப்பெற்றதாகவும், எனவே மேற்படி காலதாமதத்தை மன்னித்து தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.9 வரையான ஆவணங்களாக குறியீடு செய்யக்கோரி வாதிட்டார்.

8. எதிர்மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் தனது வாதுரையில் மனுதாரர் தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பொருந்தாது என்றும், மனுதாரர்கள், தரப்பில் சாட்சியங்களை திரட்டுவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தற்போதும் வழக்கு சொத்தில் வாடகைக்கு இருந்து வந்து வாடகை ஏதும் கொடுக்காமல் இருந்து வருகிறார்கள் என்றும், இந்நிலையில் மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கது அல்ல என்பதால் அது தள்ளுபடி செய்யப்படவேண்டும் வாதிட்டார்.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் கை தவறுதலாக எங்கேயோ மறந்து வைத்துவிட்டோம் என்றும், அந்த ஆவணங்கள் தற்போதுதான் தேடி கிடைக்கப்பெற்றதாகவும் கூறியுள்ளார்கள், எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தற்போது தாக்கல் செய்யும் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பொருந்தாது என்றும், மனுதாரர்கள், தரப்பில் சாட்சியங்களை திரட்டுவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தற்போதும் வழக்கு சொத்தில் வாடகைக்கு இருந்து வந்து வாடகை ஏதும் கொடுக்காமல் இருந்து வருகிறார்கள் என்றும், கூறியுள்ளார்.

10. இம்மனுவில் மனுதாரர்கள் தற்போது கூடுதல் ஆவணங்களை முன்னிலைப்படுத்தியுள்ளதை பார்க்கும்போது மேற்படி அசல் வழக்கில் சாட்சிகளை தீர விசாரணை செய்து வழக்கு ஆவணங்களை குறியீடு செய்து தீர்வு கண்டால் நீதிக்கும், நியாயத்திற்கும் உகந்ததாக இருக்கும், மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்வதற்கு போதுமான ஆட்சேபனை எதுவும் குறியிடப்படவில்லை. மேலும் இதுபோன்ற வழக்குகள் பெருகுவதை தடுக்கவும், மேற்படி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதகமும் ஏற்படாது என்பதால் மனுதாரர்கள் தரப்பில் விசாரணை செய்து ஆவணங்களை குறியீடு செய்ய தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து இம்மனுவில் முடிவு காணப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 10.07.2025 இன்று பகரப்பட்டது.

A TAMILSELVAN Digitally signed by A TAMILSELVAN Date: 2025.07.14 12:31:14 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

இல்லை.

A TAMILSELVAN Digitally signed by A TAMILSELVAN Date: 2025.07.14 12:31:20 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.